**பலாங்கொடை நகர சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பலாங்கொடை நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 6,457,948 தொகையான ஊழிய கடன் ரூபா 5,008,370 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ஊழியர் கடன் ரூபா 1,449,578 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 78,310 தொகையான நூலகப் புத்தகங்கள் மீளாய்வாண்டின் போது கொள்வனவு

செய்யப்பட்டதாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக நூலகப் புத்தகங்கள் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் பட்டோலையின் பிரகாரம், ரூபா 15,751,210 தொகையான கிடைக்கவேண்டிய மூலதனப் பெறுவனவுகள் ரூபா 16,364,864 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக கிடைக்கவேண்டிய மூலதனப் பெறுவனவுகள் ரூபா 613,624 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நகர சபைக்குரிய ஆயுர்வேத நிலையத்தில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ள ரூபா 305,704 தொகையான இருப்பு மற்றும் ரூபா 697,620 தொகையான இறுதியிருப்பு என்பவற்றைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் சிபாரிசின் பிரகாரம் அகற்றப்பட்ட ரூபா 18,966 தொகையான நூலகப் புத்தகங்கள் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய ஆதனவரி ரூபா 3,776,898 ஆக இருந்தபோதிலும், ரூபா 3,530,947 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக கிடைக்கவேண்டிய ஆதனவரி ரூபா 245,951 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) பேரூந்து நிலைய நிர்மாணத்திற்காக உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்த கடனுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிதியத்தின் மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம், ரூபா 82,088,845 தொகையான செலுத்த வேண்டிய வட்டி ரூபா 53,263,555 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 28,825,290 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நன்கொடையாகக் கிடைத்த ரூபா 99,505 தொகையான நூலகப் புத்தகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 108 வருமானக் கடன்பட்டோர்களிடமிருந்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடவேண்டியிருந்த ரூபா 1,202,654 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 139,100 தொகையான கடை வாடகை 2017 யூன் 19 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 763,360 கூட்டுத்தொகையான உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்பு பணம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 9,303,601 தொகையான நிதி மாற்றல் கணக்குகளின் மீதி 2017 யூன் 19 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை.

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த 05 நிலையான சொத்து விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நிலையான சொத்துப் பதிவேடு, விரிவான பட்டோலை மற்றும் ஏனைய 02 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான விரிவான பட்டோலை, காலப்பகுப்பாய்வு அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானம் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

---

கீழே குறிப்பிடப்படுகின்ற இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 137 | சேவைக்காக, வேலைக்காக அல்லது வழங்கல்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் சபையின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 80,480 கூட்டுத்தொகையான 06 உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 260(1) | குறித்த நபருக்கே பணம் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணானதாக சுகாதாரப் பிரிவின் 08 ஊழியர்களுக்கு விழா முற்பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 80,000 தொகை ஒவ்வொரு ஊழியருக்கும் தனித்தனியாகச் செலுத்தாது வேறு தரப்பினருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப்பிரமாணம் 267(1) | 2016 ஆம் ஆண்டின் ஆகஸ்ட், செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் 74 உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் செலுத்தும் போது சம்பளப் பத்திரத்தில் கையொப்பம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 371(5) | 2010 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து இனங்காண முடியாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்த தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 34,110,665 மற்றும் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 177,000 கூட்டுத்தொகையான 03 உப கட்டு நிதிகள் 2017 யூன் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (v) | நிதிப்பிரமாணம் 1646 | சபைக்குச் சொந்தமான 26 வாகனங்கள் தொடர்பாக ஓட்ட அட்டவணைப் புத்தகத்தின் மாதாந்த பொழிப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நிதிப்பிரமாணம் 1647(உ) | சபையில் உள்ள மோட்டார் வாகனம் தொடர்பாக உரிய விபரங்களை உள்ளடக்கிய வாகனப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX ஆவது அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவு | 05 உத்தியோகபூர்வ இல்லங்களின் மாதாந்த பொருளாதார வாடகை ரூபா 1,000 முதல் ரூபா 2,000 வரை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், சபைத் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 1,500 மாதாந்த வாடகையொன்று அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சபைக்குச் சொந்தமான 15 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,888,420 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,875,002 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 5,986,582 வீழ்ச்சியொன்று காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் யூன் முதல் நகர சபை விருந்தினர் விடுதி மூடப்பட்டிருந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 சனவரி முதல் 2015 மே வரையான காலப்பகுதிக்குரியதாக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 3,216,410 தொகை மற்றும் 2015 யூன் முதல் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக பெற வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் என்பவற்றை இனங்கண்டு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு 2017 யூன் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 யூலை முதல் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிடவேண்டியிருந்த ரூபா 206,161 தொகையான நீதிமன்றத் தண்டப் பணத்தை மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு 2017 யூன் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டிற்கான நிலுவையாக இருந்த ஆதனவரிக் கட்டணம் ரூபா 2,105,153 தொகையினை அறவிடுவதற்கு 2017 யூன் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்திட்ட மீளாய்வு

## 3.1 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்தல்

2016 மே 21 ஆந் திகதி வெஸக் பௌர்னமி போயா தினத்தின் போது மதுபானம் 163,110 மில்லிலீற்றர் அனுமதிப்பத்திர நிபந்தனைகளுக்கு முரணாக சபைக்குரிய பலாங்கொடை விருந்தினர் விடுதியில் வைக்கப்பட்டமையின் அடிப்படையில் இரத்தினபுரி உதவி மதுவரி ஆணையாளரினால் 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதி ரூபா 1,515,000 தண்டப்பணம் சபைக்கு விதிக்கப்பட்டிருந்தது. அந்த தண்டப்பணம் 09 தவணைகளில் செலுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் 2017 யூன் 19 ஆந் திகதி வரையிலும் 04

தவணைகளில் ரூபா 793,571 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த சம்பவம் தொடர்பான உத்தியோகத்தர்களிடமிருந்து உரிய தண்டப்பணத்தை அறவிடுவதற்கு சபையினால் பலாங்கொடை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

**(ஆ) கடைகளை உப வாடகைக்கு வழங்குதல்**

---

பேரூந்து நிலைய கடைகளை வாடகைக்கு வழங்குவதற்குரிய உடன்படிக்கையின் 2.5 ஆம் பிரிவின் பிரகாரம் வாடகையாளரினால் அக் கடைகளை அல்லது அதன் பகுதியொன்றின் உரித்தை வேறொருவருக்கு விற்பனை செய்தல், கையளித்தல் அல்லது உப வாடகைக்கு வழங்குதல் முடியாதிருந்த போதிலும், அதற்கு முரணாக கூட்டுமொத்தமாக ரூபா 10,100 தொகையான மாதாந்த வாடகையில் வாடகைக்கு வழங்கப்பட்ட 02 கடைகள் கூட்டுமொத்தமாக ரூபா 35,000 தொகைக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், பொதுச் சந்தையில் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான உடன்படிக்கையின் 34 ஆவது பிரிவிற்கு முரணாக உடன்படிக்கை செய்யப்பட்ட வாடகையாளரினால் 07 கடைகள் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக 2017 யூன் வரையிலும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளை விரிவுபடுத்தல்**

---

வாடகை உடன்படிக்கைக்கு முரணாக வாடகையாளரினால் உப வாடகைக்கு வழங்கப்பட்ட 06 கடைகள் அனுமதியின்றி விரிவுபடுத்துதல் மற்றும் கடைகளின் பௌதீக தன்மையினை மாற்றுதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக 2017 யூன் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பலாங்கொடை பொதுச் சந்தையில் மீன் விற்பனை செய்தல்.**

---

பலாங்கொடை பொதுச் சந்தையில் பொது மலசலகூடம் மத்தியில் வரும் வகையில் மலசலகூடத்திற்கு இரு பக்கத்திலும் மற்றும் அதற்கு அடுத்தாற்போலும் நிர்மாணிக்கப்பட்ட 03 கடைகளை களஞ்சியமாக பயன்படுத்துவதற்காக நகர சபையினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கைக்கு முரணாக அந்தக் கடைகள் மீன் விற்பனை செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(உ) நகர சபை எல்லையில் ஒதுக்கப்பட்ட சுற்றாடல் வலயத்தைப் பாதுகாத்தல்**

---

2014 யூன் 23 ஆந் திகதிய 1868/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட 1982 இன் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 8(ஊ) பிரிவின் பிரகாரம் நகர அபிவிருத்தி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட பலாங்கொடை நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்திற்கான அபிவிருத்தி திட்டத்தின் 4.3.5 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் மூன்று நீர் வழிகள் மற்றும் 34 ஏக்கர் காணி என்பவற்றை ஒதுக்கப்பட்ட சுற்றாடல் வலயமாக 2014 ஆம் ஆண்டின் போது பெயரிடப்பட்டிருந்தது. இந்த ஒதுக்கப்பட்ட சுற்றாடல் வலயம் தொடர்பாக மக்களுக்கு அறிவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் 2016 நவம்பர் 07 ஆந் திகதி வரையில் எடுக்கப்படாமையினால் இந்த ஒதுக்கப்பட்ட வலயம் எதிர்காலத்திற்காக பாதுகாக்கும் செயற்பாடுகளுக்கு இடையூறாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர சபைக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 24,928,666 பெறுமதியான மோட்டார் கிரேடர் இயந்திரம் 2015 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) சபையின் பொதுச் சந்தைக்குரிய உப விதியின் 4 ஆவது பிரிவின் பிரகாரம், பொதுச் சந்தையில் மீன் விற்பனை செய்வதற்காக அனுமதி இல்லாதிருந்த போதிலும், அதற்கு முரணானதாக பொதுச் சந்தை வளவில் 10 மீன் விற்பனை கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 715,910 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 06 விற்பனைக் கடைகள் 2014 ஒக்தோபர் முதலும் எஞ்சிய 04 விற்பனைக் கடைகள் அதற்கு முன்னிருந்தும் விளைவற்றுக் காணப்பட்டன.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் செயலாளர் பதவியை உள்ளடக்கிய நூலகர் பதவியொன்று, 02 வருமானப் பரீட்சகர் பதவிகள், ஒரு மருந்து கலவையாளர் பதவி மற்றும் ஒரு வேலைத் தொழிலாளர் பதவி என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) 2016 மார்ச் 15 ஆந் திகதிய DMS/D/0217 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் மூலம் பலாங்கொடை நகர சபையில் தீயணைப்பு பிரிவிற்கான பதவியணியில் 20 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பதவிகளை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படாமையினால் தீயணைப்பு பிரிவை முறையாகத் தாபிப்பதற்கு 2017 யூன் வரையிலும் முடியாதிருந்தது.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டம்

-----------------------------------------

களஞ்சியப் பேரேட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 7,760 பெறுமதியான 04 பித்தளை பூச்சாடிகளின் பற்றாக்குறையொன்று 2017 யூன் 14 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.5 செயற்திட்டத்தை தாமதப்படுத்தல்

-------------------------------------------------------

பலாங்கொடை நகர சபையின் பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 33,700,000 ஆன 12 மூலதன செயற்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து அங்கீகாரம் கிடைக்காமையின் காரணமாக 2017 யூன் 19 ஆந் திகதி வரை அந்த அபிவிருத்தி செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.6 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

------------------------------------------------------

நகர சபையின் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு வருடாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களிலிருந்து மீள் சுழற்சி செய்யமுடியாத கழிவுப்பொருட்கள் அண்ணளவாக 504 தொன் கழிவுப்பொருள் முகாமைத்துவ

நிலையத்தில் ஒன்று சேர்க்கப்பட்டிருந்ததுடன் அந்த கழிவுப்பொருள் இருப்பை சுற்றாடலுக்கு பாதகமற்ற வகையில் அகற்றுவதற்கான முறைமையொன்று 2017 யூன் வரையிலும் சபை தயாரித்திருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம், மீண்டெழும் செலவின நிதிஏற்பாடு ரூபா 123.12 மில்லியனாக இருந்ததுடன், அதன் உள்ளபடியான செலவினம் ரூபா 109.67 மில்லியனாக இருந்தமையால் நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 13.46 மில்லியன் அதாவது 11 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. மூலதனச் செலவினத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 31.55 மில்லியனாக இருந்ததுடன் அதன் உள்ளபடியான செலவினம் ரூபா 13.12 மில்லியனாக இருந்தமையால் நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 18.43 மில்லியன் அதாவது 58 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பாதீடு பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 பெறுகைகள் திட்டம்

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4 ஆவது அத்தியாயத்தின் 4.2.1(அ) வழிகாட்டியின் பிரகாரம், சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| | (ii) வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் குறைத்தும், அதிகரித்தும் கணக்கீடு செய்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) | பேரேட்டுக் கணக்கு மீதிகள் பதிவேடுகளுடன் இணங்காமை |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | செலவின நிதிஏற்பாடுகளில் கவனத்திற் கொள்ளக்கூடிய சேமிப்புக் காணப்பட்டமை. |
| | | (ii) | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) | வருமான நிர்வாகம் | | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| (ஈ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | வாகனப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| | | (ii) | வாகன எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படாமை |
| (உ) | மனிதவள முகாமைத்துவம் | | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |